# Holiday Assignments

## Primary Section

**Tamil Language** | **Grade 5** | **Tamil Medium**

**01) கடிதத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

ந. வசந்தன்
பிரதான வீதி,
[illegible]

அன்புள்ள நண்பனுக்கு வணக்கம்,

நான் நலம். நீ நலமாக உள்ளாயா? வருகின்ற புத்தாண்டுக்கு ஊருக்கு வரலாம் என நினைக்கின்றேன். நமது நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து புத்தாண்டைக் கொண்டாடலாம். எல்லா நண்பர்களையும் சேர்த்து ஆயத்தமாகிக் கொள்ளுங்கள். உங்களைக் காண்பதற்கு மிகவும் ஆவலாய் உள்ளேன்.

இப்படிக்கு
உனது நண்பன்.
வசந்தன்

1. இக்கடிதத்தில் முக்கிய விடயம் ஒன்று எழுதப்படவில்லை. எது என்ன?
   ..........................................................................................
2. இக்கடிதத்தை எழுதியவர் யார்? ..........................................................
3. புத்தாண்டு எந்த மாதத்தில் கொண்டாடப்படும்? ..........................................
4. இங்குள்ள எதிர்கால வினைச்சொல்லைத் தெரிந்து எழுதுக.
   ..........................................................................................
5. 'விருப்பமாய்' என்ற கருத்தைத் தரும் சொல்லைத் தெரிந்து எழுதுக.
   ..........................................................................................

**02) நிறுத்தக் குறிகளை இடுக.**

1. பாட்டி முழங்கால் வலி எப்படி இருக்கிறது
   ..........................................................................................
2. மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்
   ..........................................................................................

**03) விடை எழுதுக.**

1. முத்திரைகளை எங்கே வாங்கலாம்? ..........................................
2. சாதாரண உள்நாட்டுக் கடிதத்திற்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி எவ்வளவு? ..........................................
3. சில கடிதங்களில் காணப்படும் சுருக்கக் குறியீடுகளின் விரிவாக்கத்தை எழுதுக.
   1. ப. த : ..........................................
   2. அ.ப : ..........................................



1 ____________________________________

2 ____________________________________

3 ____________________________________

4 ____________________________________

5 ____________________________________